Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, ஆகஸ்ட் 02, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 18

# இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் சென்னை வருகையையொட்டி, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் தலைமையில் காவல் அதிகாரிகள் மற்றும் 5,000 காவல் ஆளிநர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

சென்னை, ஆகஸ்ட் 02 2021: இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் 02.8.2021 ஆம் தேதி சென்னை வருகை புரிகிறார். 02.08.2021 அன்று மாலை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில் நடைபெறும் சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, முன்னாள் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியின் திருவுருவ படத்தை திறந்து வைக்கிறார். பின்னர், சென்னையிலுள்ள தமிழக ஆளுநர் மாளிகையில் தங்கி, மறுநாள் (03.8.2021) காலை, தனிவிமானம் மூலம் நீலகிரி புறப்பட்டு செல்கிறார். அதன்பேரில், சென்னைக்கு வருகை தரும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், , காவல் அதிகாரிகளுடன் கலந்தாய்வு மேற்கொண்டு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார். சென்னை விமான நிலையம், ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலக வளாகம், சட்டமன்ற மண்டபம் ஆகிய இடங்களில், காவல் ஆணையாளர் தலைமையில், சென்னை பெருநகர காவல் அதிகாரிகள், காவல் ஆளிநர்கள், போக்குவரத்து காவல், கமாண்டோ படை வீரர்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் படை உள்ளிட்ட 5,000 காவல் துறையினருடன் 5 அடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் சென்னையில் செல்லும் வழித் தடங்களில், போக்குவரத்து காவல் துறையினருடன் இணைந்து தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொண்டு, அனைத்து இடங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# போலீசாருக்கு வாரம் ஒருநாள் விடுமுறை அறிவிப்பு வெளியிட்டிருப்பது இனிய செய்தி - விஜயகாந்த்

சென்னை, ஆக. 02 2021: தமிழ்நாடு போலீசாருக்கு வாரம் ஒருநாள் விடுப்பு வழங்கப்படும் என்ற தமிழ்நாடு அரசின் அறிவிப்புக்கு, தேமுதிக தலைவர் விஜயகாந்த் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் காவலர்களுக்கு வாரம் ஒருநாள் விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு காவல்துறை தலைமை டிஜிபி சைலேந்திரபாபு தெரிவித்துள்ளார். இதற்கு வரவேற்பு தெரிவித்து தேமுதிக தலைவர் விஜயகாந்த் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் காவலர்கள் விடுமுறையின்றி பணியாற்றுவதால், மன வேதனையும், மனச் சோர்வும் அடைந்து வந்தனர். இதனால், வாரம் ஒரு முறை விடுமுறை வழங்க வேண்டும் என காவலர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்ததனர். தற்போது இந்த கோரிக்கையை ஏற்று வாரம் ஒருநாள் விடுமுறை அறிவிப்பு வெளியிட்டிருப்பது இனிய செய்தி என தேமுதிக தலைவர் விஜயகாந்த் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பிறந்தநாள் மற்றும் திருமண நாளில் விடுமுறை அறிவித்திருப்பதற்கும் வரவேற்பு தெரிவித்துள்ள அவர், காவலர்களுக்கு வாரம் ஒரு முறை விடுமுறை வழங்கப்படும் என அறிவித்த டிஜிபி சைலேந்திரபாபுவுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் பாராட்டு தெரிவித்துக்கொள்வதாக தேமுதிக தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



# ஊத்துக்காட்டு எல்லையம்மன் கோயிலில், ரூ.4 லட்சம் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளால் அம்மன் அலங்காரம்

சென்னை, ஆக.02 2021: சென்னையை அடுத்து பூந்தமல்லி ஊத்துக்காட்டு எல்லையம்மன் கோயிலில், ரூ.4 லட்சம் மதிப்புள்ள புதிய ரூபாய் நோட்டுகளால் அம்மன் அலங்கரிக்கப்பட்டிருந்தது பக்தர்களை வெகுவாக கவர்ந்தது.

சென்னையை அடுத்து பூந்தமல்லி அருகேயுள்ள குமணன்சாவடியில், பிரசித்தி பெற்ற ஊத்துக்காட்டு எல்லையம்மன் கோயில் அமைந்துள்ளது. ஆடி மாதத்தை முன்னிட்டு 10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில், ஊத்துக்காட்டு எல்லையம்மனுக்கு ரூ.500, ரூ.100, ரூ.20, ரூ10 உள்ளிட்ட ரூ.4 லட்சம் மதிப்புள்ள புதிய ரூபாய் நோட்டுகளை கொண்,டு மாலையாக கட்டி தோரணங்களாக அம்மனுக்கு அலங்காரம் செய்யப்பட்டது.

மேலும் கோயிலின் மேல்பகுதி மற்றும் உள்பகுதி முழுவதும் வாழை , கொய்யா , பப்பாளி , ஆப்பிள் , மாதுளை , தர்பூசணி உள்ளிட்ட பல்வேறு பழங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது . இது பக்தர்களை கவரும் வகையில் மிகவும் சிறப்பாக இருந்தது. இதனை அறிந்து, பூந்தமல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் . இதைத்தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது .



# ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியா தலைமை ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி

புதுடெல்லி ஆகஸ்ட் 02 2021: ஐ.நா.வின் அதிகாரம் மிகுந்த பாதுகாப்பு கவுன்சிலின் தற்காலிக உறுப்பினராக 2021 மற்றும் 2022-ம் ஆண்டுகளுக்காக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 15 உறுப்பினர் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களான 5 நாடுகளை தவிர்த்து இந்தியா உள்பட 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன.

இந்த கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றும் சுழற்சி முறையில் ஒவ்வொரு மாதமும் கவுன்சிலுக்கு தலைமை தாங்கும். அந்த வகையில் இந்தியா இந்த மாதம் பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ளது.

இந்தியா தனது முதல் பணி நாளான திங்கட்கிழமை (ஆகஸ்ட் 2), இந்தியா சார்பில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி, செய்தியாளர்களை சந்தித்து பாதுகாப்பு கவுன்சிலின் ஆகஸ்ட் மாத திட்டம் குறித்து விளக்குவார்.

ஜூலை மாதம் பாதுகாப்பு கவுன்சிலுக்கு தலைமை தாங்கி சிறப்பாக வழிநடத்தியதற்காகவும், இந்தியாவிற்கு ஆதரவு அளித்ததற்காகவும் பிரான்சுக்கு திருமூர்த்தி நன்றி தெரிவித்தார்.



அமைதிப்படை வீரர்களின் நினைவாக இந்தியா ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்யும். சிரியா, ஈராக், சோமாலியா, ஏமன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட பல முக்கிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் கூட்டங்களை திட்டமிட்டுள்ளது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திருமூர்த்தி கூறினார்.

# கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த பரிசோதனைகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் - சென்னை மாநகராட்சி

சென்னை ஆகஸ்ட் 02 2021: சென்னை மாநகராட்சி சார்பில் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை மாநகராட்சி சார்பில் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் அதிக பரிசோதனைகள் மேற்கொண்டு தொற்று பாதித்த நபர்களை கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்துதல் அல்லது மருத்துவமனைகளில் அனுமதிப்பதன் மூலம் தொற்று பரவலை கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சியின் சார்பில் நாள்தோறும் சராசரியாக 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது சென்னையில் கொரோனா தொற்று பரவுதலை தடுக்க மாநகராட்சியின் சார்பில் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகள், உதாரணமாக மார்க்கெட், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், அரசு அறிவித்துள்ள தளர்வுகளுக்கு உட்பட்டு இயங்கும் இதர அங்காடிகள் ஆகிய இடங்களில் பணிபுரியும் நபர்களுக்கு சுழற்சி முறையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன.



இதுவரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மே 7-ந்தேதி முதல் ஜூலை 30-ந்தேதி வரை 23 லட்சத்து 86 ஆயிரத்து 986 ஆர்.டி. பி.சி.ஆர். பரிசோதனை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த மேற்குறிப்பிட்ட பரிசோதனைகளுக்கு மக்கள் தங்களது முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

# கிழக்கு முகப்பேர் வேலம்மாள் பள்ளியில் மதிப்பெண் வழங்கியதில் பாரபட்சம் 100 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பள்ளியின் வாசலில் அமர்ந்து முற்றுகை போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது

சென்னை, ஆகஸ்ட் 02, 2021: முகப்பேர் பள்ளி மாணவர்களுக்கு மதிப்பெண் குறைவாகவும் அயனம்பாக்கம் பள்ளி மாணவர்களுக்கு மதிப்பெண் அதிகமாகவும் நேற்று வெளியான மதிப்பெண் குறித்து சர்ச்சையால் பள்ளி நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள்

கிழக்கு முகப்பேர் வேலம்மாள் பள்ளியில் 12ம் வகுப்பு சி பி எஸ் இ தேர்வு மதிப்பெண் வழங்கியதில் பாரபட்சம் காட்டுவதாக குற்றம் சாடி 100 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பள்ளியின் வாசலில் அமர்ந்து முற்றுகை போராட்டம் நடத்தினார்கள்



முகப்பேர் பள்ளி மாணவர்களுக்கு மதிப்பெண் குறைவாகவும் அதே பள்ளியின் கிளை அயனம்பாக்கம் பள்ளி மாணவர்களுக்கு மதிப்பெண் அதிகமாகவும் நேற்று வெளியான மதிப்பெண் குறித்து சர்ச்சையால் பள்ளி நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் பெற்றோர்கள் ஈடுபட்டனர்

பள்ளி வளாகத்தின் முன் சுமார் 2 மணி நேரமாக பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் பள்ளி நிர்வாகம் சார்பில் முறையான பதில் கிடைக்கவில்லை என பெற்றோர்கள் புகார்.

தற்பொழுது பேச்சுவார்த்தைக்காக பெற்றோர்கள் அனைவரும் பள்ளி நிர்வாகம் அழைத்ததன் பேரில் பள்ளியின் உள்ளே சென்றுள்ளனர் பள்ளி வளாகத்தில் பள்ளியின் முதல்வருடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது

வேலம்மாள் பள்ளியில் இரண்டு மணி நேரமாக பெற்றோர்கள் போரட்டம்

சென்னை முகப்பேர் வேலம்மாள் பள்ளியில் சிபிஎஸ்சி 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்கியதில் முறைகேடு என புகார்.

10 ஆம் வகுப்பு பொது தேர்வில் 90 சதவீதம் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு தற்போது பள்ளி நிர்வாகம் 70 சதவீதம் மதிப்பெண் வழங்கியதாக புகார்.

அயனமபாக்கத்தில் உள்ள வேலம்மாள் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் அதிக மதிப்பெண் வழங்கியதாக குற்றச்சாட்டு.

வேலம்மாள் பள்ளியில் நீட் பயிற்சியுடன் படிக்க 2 லட்சம் முதல் 7 லட்சம் வரை கட்டணம் செலுத்தியதாக பெற்றோர் வேதனை

100 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பள்ளியை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆகஸ்ட் 5-ம் தேதி முதல் கேரளாவில் இருந்து தமிழ்நாடு வருபவர்களுக்கு ஆர்.டி.பி.சி.ஆர் சோதனை கட்டாயம் - அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஆக.02 2021: ஆகஸ்ட் 5-ம் தேதி முதல் கேரளாவில் இருந்து தமிழ்நாடு வருபவர்களுக்கு ஆர்.டி.பி.சி.ஆர் சோதனை கட்டாயம் என மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த 2 நாட்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. இதையடுத்து சென்னையில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் பயணிகளுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகளுக்கு விமான நிலையத்தில், தெர்மல் ஸ்கிரினிங் மற்றும் ஆர்டிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

கொரோனா பரிசோதனை கட்டாயம்

தொடர்ந்து பேசிய அவர், 13 நிமிடத்திற்குள்ளாக பரிசோதனை மேற்கொண்டு முடிவு அளிக்கும் திட்டம் ஓரிரு தினங்களில் செயல்படுத்த உள்ளதாக தெரிவித்தார். மேலும், மக்கள் நலனுக்காகவே அதிக கூட்டம் கூடும் பகுதிகளில் கடைகள் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் , கேரளாவில் இருந்து தமிழ்நாடு வரும் பயணிகளுக்கு, ஆகஸ்ட் 5-ஆம் தேதி முதல் ஆர்.டி.பி.சி.ஆர் சோதனை கட்டாயப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



கேரளாவில் கொரோனா தொற்று பரவல் குறையாமல் உள்ளது. தினசரி பாதிப்பு அளவு 20 ஆயிரத்துக்கு மேல் இருந்து வருகிறது. அதை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் குறித்து ஆராய, இந்திய ஒன்றிய சுகாதாரத்துறை அதிகாரிகள், கேரளாவில் முகாமிட்டுள்ளனர். மேலும், தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக வார இறுதி நாட்களில் மாநிலம் முழுவதும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், கேரளாவில் இருந்து தமிழ்நாட்டுக்குள் நுழையும் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை சான்றிதழ் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உணவகங்களில் 50 சதவீத இருக்கைகளுக்கு மேல் உணவருந்த அனுமதித்தால் தொழில் உரிமம் ரத்து

சென்னை, ஆக. 02 2021: உணவகங்களில் 50 சதவீத இருக்கைகளுக்கு மேல் உணவருந்த அனுமதித்தால் அபராதம் விதிக்கப்பட்டு, தொழில் உரிமம் ரத்து செய்யப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த சில தினங்களாக கொரோனா பாதிப்பு அதிகரித்த வண்ணம் உள்ளது. இதையடுத்து தமிழ்நாடு அரசு முழுவீச்சில் கொரோனா தடுப்பு பணிகளை துரிதப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. அந்த வகையில், சென்னையில் கொரோனா பரவலை தடுக்க, மாநகராட்சி நிர்வாகமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, சென்னையின் முக்கிய பகுதிகளான தி.நகர் ரெங்கநாதன் தெரு, கொத்தவால்சாவடி உள்பட 9 இடங்களில் உள்ள கடைகளை மூட உத்தரவிடப்பட்டது.

மேலும் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 2 ஆயிரத்து 608 மண்டபங்கள், உணவகங்களில் வருவாய்துறை அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டதில், 57 இடங்களில் விதிமீறல் கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. இதுவரை 2 லட்சத்து 21 ஆயிரத்து 800 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு அறிவித்துள்ள தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கில் ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில் 50 சதவீத இருக்கைகளுக்கு மட்டுமே பொதுமக்கள் உணவருந்த வேண்டும் என மாநகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. மீறும் உணவகங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அவர்களுக்கான தொழில் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் மாநகராட்சி நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா தொற்று நடவடிக்கையாக சுவாமி தரிசனத்திற்கு தடை செய்து மாவட்ட ஆட்சியர் மோகன் உத்தரவு



*விழுப்புரம், ஆக. 02 2021:* விழுப்புரம் மாவட்டத்தில் சுவாமி தரிசனத்திற்கு தடை செய்து ஆட்சியர் மோகன் உத்தரவிட்டுள்ளார்.

ஆடி மாதத்தில் கோவில்களில் அதிகமானோர் கூடுவதால் கொரனோ பரவல் அதிகரிக்கும் என்பதால், விழுப்புரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவில், திருவக்கரை சந்திர மௌலீஸ்வரர் திருக்கோவில், மயிலம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், பூவரசன்குப்பம் லட்சுமி நரசிம்மர் திருக்கோவில், அவலூர்பேட்டை சித்தகீரிஸ்வரர் முருகன் திருக்கோவில், கீழ்புத்துப்பட்டு மஞ்சினீஸ்வரர் திருக்கோவில் உட்பட அனைத்து பிரதான திருக்கோவில்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து திருக்கோவில்களிலும் ஆடிக் கிருத்திகை திருவிழாவை முன்னிட்டு 01.08.2021 ஞாயிற்றுக்கிழமை முதல் 03.08.2021 செவ்வாய்க்கிழமை வரை சாமி தரிசனம் செய்வதற்கும் திருவிழாக்கள் நடத்துவதற்கும் அனுமதி கிடையாது என ஆட்சியர் மோகன் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழகத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் மட்டும் இல்லாமல் அனைத்து துறையிலும் முறைகேடு நடந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு : மதுரையில் அமைச்சர் மூர்த்தி பேட்டி

*மதுரை, ஆக 02, 2021:* மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள எம்ஜிஆர் பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு கொரோனா தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் தடுப்பூசி முகாமை பத்திரப்பதிவு துறை அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார், உடன் மதுரை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையர் பங்கேற்றனர்.

மேலும் பேருந்து நிலையத்திற்கு வந்த பொதுமக்களுக்கு தடுப்பூசி இணையம் செய்யப்பட்டது. மேலும் விழிப்புணர்வு குறித்த குறும்படமும் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது.





தொடர்ந்து செய்தியாளர் சந்தித்துப் பேசுகையில், தமிழகம் முழுவதும் ஆடி 18 பெருக்கு போது பொதுமக்கள் அதிகம் கூட வாய்ப்பு உள்ளதால் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் முக்கிய கோவிலுக்கு செல்ல பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது, மதுரை மாவட்டத்தில் போதுமான அளவு ஆக்சிஜன் உள்ளது ஒன்றிய அரசிடமிருந்து பெற்று தடுப்பூசி மக்களுக்கு தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது, ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் விரைந்து முடிக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது, ஒப்பந்ததாரர்கள் பணியை விரைந்து முடிக்க துரிதபடுத்தப்பட்டுள்ளனர், கொரோனா பேரிடர் காலம் என்பதால் பணிகளை முடிப்பதில் ஓரிரு மாதங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளது, வெகு விரைவில் பணிகள் முடிக்கப்படும், ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் மட்டும் இல்லாமல் அனைத்து துறையிலும் முறைகேடு நடந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# காரியாபட்டியில் கொரோனா விழிப்புணர்வு வாரம் பேரூராட்சி செயல் அலுவலர் முருகன் பங்கேற்பு



*காரியாபட்டி, ஆக-02 2021:* விருதுநகர் மாவட்டம், காரியாபட்டியில், கொரோனா மூன்றாம் அலையை தவிர்க்கும் நோக்கில் கொரோனா விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுவதையொட்டி, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, வருவாய் துறை, சுகாதாரத்துறை, பேரூராட்சி நிர்வாகம், காவல்துறை, தன்னார்வ அமைப்பு சார்பில் கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் *01.08.2021* முதல் *07.08.2021* வரை கொரோனா விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்பட்டு, மாவட்டத்தில் தினந்தோறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பல்வேறு அரசு துறைகள் மூலம் ஒருங்கிணைந்து நடத்த மாவட்ட ஆட்சித்தலைவர் மேகநாத ரெட்டி உத்தரவிட்டிருந்தார். இதில் துண்டுப் பிரசுரங்கள், சிற்றேடுகள், டிவிட்டர், முகநூல் மற்றும், இன்ஸ்டாகிராம் போன்ற சமூகவளை தளங்களிலும் தொலைக்காட்சி நேர்காணலிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கடைவீதிகள், ரயில் நிலையம், பேருந்துநிலையம் போன்ற பொது இடங்களில் வரும் மக்களிடையே முகக்கவசம் அணியவும், சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வியாபாரிகள் நலச்சங்கங்களுக்கு கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தனியார் மருத்துவமனைகள் மற்றும் இந்திய மருத்துவசங்கத்தின் மூலம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும், மாணவர்களுக்கிடையே குறும்படப் போட்டிகள், ஓவியப்போட்டிகள், கொரோனா விழிப்புணர்வு வாசகத்தை உருவாக்குதல், எப்.எம் ரேடியோ மூலம் கேள்வி பதில் நிகழ்ச்சிகள், மீம்ஸ் உருவாக்குதல் போன்றவற்றை நடத்தவும், கிராமிய கலைஞர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரிக்க கபசுரகுடிநீர் வழங்கவும், கிராமஅளவில், நூறு சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்துவதை உறுதிசெய்யவும், அனைவரும் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியினைக் கடைபிடிப்பது, கைகளை அடிக்கடி சோப்பு, கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது ஆகியவற்றைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். நோய்த் தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், பொதுமக்கள் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை பெற வேண்டும் எனவும் இதுபோன்ற விழிப்புணர்வுகளை பொதுமக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் காரியாபட்டி பேருந்து நிலையத்தில் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை, பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசியான கோவிஷீல்டு போடும் சிறப்பு முகாமில் விருதுநகர் நேரு யுவ கேந்திராவுடன் இணைக்கப்பட்ட காரியாபட்டி அன்னை தெரசா இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் பொதுமக்களை தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்தும் தடுப்பூசி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி தடுப்பூசி போட வைத்தனர். மேலும், பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வருவாய் வட்டாட்சியர் தனக்குமார், காரியாபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் முருகன், சார்பு ஆய்வாளர் ஆனந்தஜோதி, சுகாதார ஆய்வாளர் கருப்பையா, பேரூராட்சி சுகாதார மேற்பார்வையாளர் ராம்குமார், எஸ்.பி.எம் ட்ரஸ்ட் நிறுவனர் அழகர்சாமி ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர். அன்னை தெரசா இளைஞர் நற்பணி மன்றத்தின் செயலாளர் அருண்குமார் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களை தடுப்பூசி போட வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை ஊழியர்கள், பேரூராட்சி ஊழியர்கள், வருவாய்த்துறை ஊழியர்கள், காவல்துறையினர், தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விக்கிரவாண்டியில் இயற்கை முறையில் நெல்சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

*விக்கிரவாண்டி ஆக. 02. 2021:* விக்கிரவாண்டி ஒன்றியத்திலுள்ள விவசாயிகளுக்கு இயற்கை முறையில் பாரம்பரிய நெல் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் செ.குன்னத்தூரில் நடந்த பயிற்சி முகாமிற்கு மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (திட்டம்) வேல்விழி தலைமை தாங்கி பாரம்பரிய நெல் சாகுபடி குறித்தும் அரசின் திட்டங்கள் குறித்தும் விளக்கிப் பேசினார்.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், விக்கிரவாண்டி வேளாண்மை உதவி இயக்குனர் டாக்டர் மாதவன் ஆகியோர் நெல் சாகுபடியில் ஏற்படும் இடர்பாடுகள் குறித்தும், நெல் ரகங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்து பேசினர்.

துணை வேளாண்மை அலுவலர் அன்பழகன், உதவி வேளாண்மை அலுவலர் திவ்யபாரதி, அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் விக்னேஷ், முன்னோடி விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி ஒன்றியம் செ. குன்னத்தூரில் துணை இயக்குனர் வேல்விழி தலைமையில் விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. அருகில் உதவி இயக்குனர் டாக்டர் மாதவன்.

# விக்கிரவாண்டியில் கொரோனா நோய்தொற்று தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்

*விக்கிரவாண்டி ,ஆக.02 2021:* விக்கிரவாண்டி பேரூராட்சியில் சார்பில் கொரோனா நோய்தொற்று தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடந்தது.

விக்கிரவாண்டி பேரூராட்சியில் நேற்று காலை செயல் அலுவலர் அண்ணாதுரை தலைமையில் வீதி வீதியாக சென்று கொரோனா நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி முக கவசம் சமூக இடைவெளி கை கழுவுதல் போன்ற விதிமுறைகளை பொதுமக்கள் கடைபிடிக்க கோரி துண்டுப்பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று வினியோகித்தனர்.

துப்புரவு ஆய்வாளர் விஸ்வநாதன் மேற்பார்வையாளர் ராமலிங்கம், பதிவறை எழுத்தர் சேகர், நோய் தடுப்பு பணியாளர்கள் வாசு, வெங்கடாசலம், வீரசேகர், அன்பரசன், தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் அண்ணாதுரை தலைமையில் கொரோனா நோய்தொற்று தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடந்தது.

# நமது மொழிகளைப் பாதுகாப்பதற்கு, ஒருங்கிணைந்த மற்றும் புதிய முயற்சிகள் அவசியம்: குடியரசு துணைத் தலைவர்

*புதுதில்லி, ஆக. 02, 2021:* இந்திய மொழிகளைப் பாதுகாக்கவும், அவற்றிற்கு புத்துணர்ச்சியூட்டவும், புதுமையான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு குடியரசு துணைத் தலைவர் திரு எம் வெங்கையா நாயுடு இன்று அழைப்புவிடுத்துள்ளார். மக்கள் இயக்கத்தால் மட்டுமே மொழிகளைப் பாதுகாக்க முடிவதோடு, அவற்றின் தொடர்ச்சியான நிலையை உறுதி செய்ய முடியும் என்று வலியுறுத்திய அவர், மொழியின் பாரம்பரியத்தை நமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்வதில் மக்கள் ஒன்றாக இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

இந்திய மொழிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான, மக்களால் உந்தப்பட்ட முன்முயற்சிகள் குறித்துப் பேசுகையில், ஒரு மொழியை வளப்படுத்துவதில் மொழிபெயர்ப்பு ஆற்றும் முக்கிய பங்கு குறித்து எடுத்துரைத்தார். இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பின் தரம் மற்றும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறினார். பழமையான இலக்கியங்களை இளைஞர்களுக்குப் புரியும் வகையில் பேச்சு வழக்கில் உருவாக்கவும் குடியரசு துணைத் தலைவர் அறிவுறுத்தினார். ஊரக பகுதிகளைச் சேர்ந்த மொழிகளில் உள்ள அழிந்து வரும் மற்றும் தொன்மையான வார்த்தைகள் மற்றும் பல்வேறு வட்டார மொழிகளைத் தொகுத்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தாய்மொழிகளைப் பாதுகாப்பது குறித்து ‘தெலுகு கூட்டமி’ ஏற்பாடு செய்திருந்த காணொலிக் கருத்தரங்கில் உரையாற்றிய திரு வெங்கையா நாயுடு, ஒருவர் தாய் மொழியைப் புறக்கணித்தால், தமது சுய அடையாளம் மற்றும் சுயமரியாதையையும் இழக்க நேரிடும் என்று அவர் எச்சரித்தார். நமது தாய்மொழியைப் பாதுகாப்பதால் மட்டுமே இசை, நடனம், நாடகம், பழக்கவழக்கங்கள், பண்டிகைகள், பாரம்பரிய அறிவு போன்ற பல்வேறு அம்சங்களைப் பராமரிக்க இயலும், என்றார் அவர்.

21 ஆண்டுகள் நீடித்த திருமணம் சார்ந்த வழக்கு ஒன்றில் பெண்ணொருவர் ஆங்கிலம் சரளமாகப் பேச இயலவில்லை என்று தெரிவித்ததையடுத்து, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு என் வி ரமணா, அந்தப் பெண்ணின் தாய்மொழியான தெலுங்கில் பேச அனுமதி அளித்ததை அடுத்து இந்த வழக்கு சுமூகமாக முடிவுக்கு வந்ததை திரு வெங்கையா நாயுடு சுட்டிக்காட்டி, தலைமை நீதிபதியின் முன்முயற்சியைப் பாராட்டினார். இதன்மூலம் நீதிமன்றங்களில் பொதுமக்கள் தங்களது தாய் மொழிகளில் உரையாற்றுவது, நீதிமன்ற உத்தரவுகளைப் பிராந்திய மொழிகளில் வழங்குவதன் அவசியத்தையும் அவர் கோடிட்டுக் காட்டினார்.

புதியக் கல்வி ஆண்டு முதல் 8 மாநிலங்களில் உள்ள 14 பொறியியல் கல்லூரிகள், பல்வேறு இந்திய மொழிகளில் பாடங்களை வழங்க அண்மையில் முடிவெடுத்துள்ளதை அவர் பாராட்டினார். அதேபோல, அழிந்துவரும் மொழிகளைப் பாதுகாப்பதற்காக கல்வி அமைச்சகம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கும் குடியரசு துணைத் தலைவர் பாராட்டு தெரிவித்தார்.

தாய் மொழிகளைப் பாதுகாப்பதற்காக உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறந்த நடைமுறைகளை சுட்டிக்காட்டிய திரு வெங்கையா நாயுடு, மொழி ஆர்வலர்கள், மொழியியலாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் ஊடகத் துறையினர் போன்றவர்கள் இந்த நாடுகளின் நடைமுறைகளிலிருந்து கற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பெருவாரியான மக்களைச் சென்றடையும் வகையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சொற்களை இந்திய மொழிகளில் மேம்படுத்துமாறும் அவர் யோசனை தெரிவித்தார்.

# மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் சுமார் 48.78 கோடி கொவிட் தடுப்பூசிகள் விநியோகம்

*புதுதில்லி, ஆக 02, 2021:* நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய அரசு இதுவரை, 48.78 கோடிக்கும் அதிகமான (48,78,63,410) கொவிட் தடுப்பூசி டோஸ்களை, மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும், இலவசமாக வழங்கியுள்ளது. மேலும் கூடுதலாக 68,57,590 தடுப்பூசிகள் வழங்கப்படவிருக்கின்றன.

இவற்றில், இன்று காலை 8 மணி வரையிலான தரவுகளின் அடிப்படையில், மொத்தம் 45,82,60,052 டோஸ் தடுப்பூசி (வீணானவை உட்பட) பயன்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 3.14 கோடி (3,14,57,081) கொவிட் தடுப்பூசி டோஸ்கள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளின் கையிருப்பில் உள்ளன.

# கொவிட்-19 பற்றிய அண்மைத் தகவல் நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இதுவரை 46.15 கோடி கொவிட் தடுப்பூசி டோஸ்கள் போடப்பட்டுள்ளன

*புதுதில்லி, ஆக. 02, 2021:* நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இதுவரை 46.15 கோடி கொவிட் தடுப்பூசி டோஸ்கள் போடப்பட்டுள்ளன.

இதுவரை மொத்தம் 3,07,81,263 பேர் குணமடைந்துள்ளனர். குணமடைந்தவர்களின் விழுக்காடு 97.37%. கடந்த 24 மணி நேரத்தில் 37,291 பேர் குணமடைந்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் 41,649 பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 4,08,920 ஆக உள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மொத்த பாதிப்பில் தற்போது சிகிச்சை பெறுபவர்களின் விழுக்காடு 1.29%. வாராந்திர தொற்று உறுதி விழுக்காடு 5%க்கும் குறைவாக, 2.42%ஆக உள்ளது.

தினசரி தொற்று உறுதி வீதம் 5%க்கும் கீழ், 2.34%ஆக பதிவாகியுள்ளது. இந்தியாவில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 46.64 கோடியாக அதிகரித்துள்ளது.

# இந்தியாவின் கொவிட் தடுப்பூசி எண்ணிக்கை: 46 கோடியைக் கடந்து மாபெரும் சாதனை

*புதுதில்லி, ஆக 02, 2021:* இந்தியாவில் செலுத்தப்பட்டுள்ள கொவிட் தடுப்பூசியின் மொத்த எண்ணிக்கை நேற்று 46 கோடியைக் கடந்து குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்தது. இன்று காலை 8 மணிக்குக் கிடைத்த முதற்கட்ட தகவலின்படி, மொத்தம் 54,94,423 முகாம்களில் 46,15,18,479 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் 52,99,036 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

நம் நாட்டில் இதுவரை மொத்தம் 3,07,81,263 பேர் கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 37,291 பேர் குணமடைந்தனர். இதன் மூலம் குணமடைந்தவர்களின் விழுக்காடு 97.37 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 41,649 பேர் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

தொடர்ந்து 34 நாட்களாக புதிய பாதிப்புகளின் எண்ணிக்கை 50,000க்கும் குறைவாக ஏற்பட்டு வருகிறது. இந்தியாவில் கொவிட் தொற்றுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 4,08,920 ஆக உள்ளது. இது, நாட்டின் மொத்த பாதிப்பில் 1.29 சதவீதமாகும்.

கடந்த 24 மணி நேரத்தில் 17,76,315 பரிசோதனைகளும், இந்தியாவில் இதுவரை மொத்தம் 46,64,27,038 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாராந்திர தொற்று உறுதி விழுக்காடு 2.42 சதவீதமாகவும், தினசரி தொற்று உறுதி விகிதம் 2.34 சதவீதமாகவும் இன்று பதிவாகியுள்ளது. தொடர்ந்து 54 நாட்களாக இந்த எண்ணிக்கை 5 சதவீதத்திற்குக் குறைவாக ஏற்பட்டுள்ளது.

# ஸ்டெர்லைட் ஆலைக்கு வழங்கிவந்த தண்ணீர் நிறுத்தம்

*தூத்துக்குடி ஆகஸ்ட் 02 2021:* சுற்றுச்சூழல் மாசு காரணமாக தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டிருந்தது. இதை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இதற்கிடையே 2-வது கட்ட கொரோனா அலையில் இந்தியா திக்குமுக்காடி கொண்டிருந்தது. 2-வது அலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்சிஜன் அதிக அளவில் தேவைப்பட்டது. இதனால் ஆக்சிஜன் தயாரிப்பதற்காக ஸ்டெர்லைட் ஆலையை திறக்க அனுமதிக்க வேண்டும் என வேதாந்தா நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது.

இதனை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம் மூன்று மாத காலத்திற்கு, அதாவது ஜூலை 31-ந்தேதி வரை ஆலையை திறக்க அனுமதி கொடுத்தது. அதன்பின் ஆக்சிஜன் தேவையைப் பொறுத்து, நீட்டிக்கப்படுவது குறித்து முடிவு செய்யப்படும் எனத் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நீதிமன்றம் உத்தரவுப்படி ஸ்டெர்லைட் ஆலை இயங்குவதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது. இதனால் நேற்று காலை ஆலைக்கு வழங்குவதற்கான தண்ணீரை அரசு நிறுத்தியுள்ளது.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# 170 க்கும் மேற்பட்ட உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் பங்கேற்கும் ஐடிபியின் மெய்நிகர் கல்வி கண்காட்சி

சென்னை, ஆகஸ்ட் 02 2021: சர்வதேச கல்வி சேவைகளின் முன்னணி நிறுவனமான ஐடிபி கல்வி தனது மிகப்பெரிய மெய்நிகர் கல்வி கண்காட்சியை ஆகஸ்ட் 3 முதல் தொடங்கி செப்டம்பர் 29 வரை தொடரும். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, அயர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த 170 க்கும் மேற்பட்ட உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் வெளிநாடுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவ இந்த கண்காட்சியில் பங்கேற்கின்றன. இந்த முதன்மை பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் வீடியோ அழைப்பு மூலம் மாணவர்களுடன் ஒருவருக்கொருவர் உரையாடுவார்கள் மற்றும் வெளிநாட்டு கல்வி குறித்த மாணவர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளிப்பார்கள்.

இந்த கண்காட்சியில் கலந்து கொள்வதற்கான செயல்முறை மிகவும் எளிது. மாணவர்கள் ஐடிபி வலைத்தளத்தில் மெய்நிகர் கண்காட்சிக்கு ஒரு இடத்தைப் பதிவு செய்ய வேண்டும். நிகழ்வுக்கு சில நாட்களுக்கு முன்பு, மாணவர்கள் பதிவுசெய்த மின்னஞ்சலுக்கு ஒரு இணைப்பை பெறுவார்கள், அந்த இணைப்பின் மூலம் கண்காட்சியில் ஒரு இடம்பெயர்ந்த நிபுணரின் உதவியுடன், மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து வீடியோ கான்பரன்சிங் மூலம் அவர்களுடன் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளலாம்.

ஐடிபி எஜிகேஷன் கல்வி நிறுவன பிராந்திய இயக்குநர் (தெற்காசியா) திரு பியூஷ்குமார் கூறுகையில், ஒரு நிறுவனத்தை குறுகிய பட்டியலிடுவதும், விண்ணப்ப செயல்முறை மூலம் பணியாற்றுவதும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஒரு கடினமான பணியாக இருக்கும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஐடிபி மாணவர்களுக்கு சிறந்த ஆலோசனையையும் உயர்தர உதவிகளையும் வழங்குவதில் உறுதியாக உள்ளது, எனவே அவர்கள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நியூசிலாந்து மற்றும் அயர்லாந்து போன்ற சிறந்த நாடுகளில் சரியான பாடத்தையும் நிறுவனத்தையும் எளிதாகத் தேர்வுசெய்து தங்கள் தொழில் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியும். மாணவர்களுக்கும் நிறுவன நிபுணர்களுக்கும் இடையில் மதிப்புமிக்க தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வசதியாக ஒரு விரிவான தளத்தை வழங்குவதே எங்கள் நிலையான முயற்சியாகும், இதன்மூலம் தகவலறிந்த முடிவை எடுக்க அவர்களுக்கு போதுமான வழிகாட்டுதல் கிடைக்கும் என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் தொற்றுநோய் காரணமாக, ஒவ்வொரு நாடும் தங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் சில திருத்தங்களைச் செய்து வருகின்றன. எனவே, ஆரம்ப கட்டத்தில் இருந்து அவர்கள் வளாகத்திற்கு பாதுகாப்பாக வரும் வரை படிப்படியாக அவர்களுக்கு உதவுவதும் வழிகாட்டுவதும் எங்கள் குறிக்கோள் என்று கூறினார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் திண்டிவனத்தில் "கலைஞர் நினைவு கோப்பை" விளையாட்டுப் போட்டியை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் துவக்கி வைத்தார்

திண்டிவனம், ஆக.02 2021: திண்டிவனத்தில் முன்னாள் முதல்வர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற "கலைஞர் நினைவு கோப்பை" விளையாட்டுப் போட்டிகளை தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ்.மஸ்தான் துவக்கி வைத்து கிரிக்கெட் விளையாடி விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தினார். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் உள்ள வால்டர் ஸ்கடர் மேல்நிலைப்பள்ளி மற்றும் நேஷனல் மேல்நிலைப் பள்ளி மைதானங்களில் முன்னாள் முதல்வர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு டாக்டர் கலைஞர் நினைவு கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.டி.பாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்துக் கொண்டு கிரிக்கெட் போட்டி மற்றும் கால்பந்து போட்டிகளை துவக்கி வைத்தார் . அப்போது அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கிரிக்கெட் விளையாடி விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தினார். அப்பொழுது விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர். ப.சேகர், பொதுக்குழு உறுப்பினர் என்.ரமணன், தலைமை செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், ஒலக்கூர் ஒன்றிய செயலாளர் பாங்கை சொக்கலிங்கம், நகர பொருளாளர் ஆசிரியர் கண்ணன், வழக்கறிஞர் அணி கே.சி. ஆதித்யன், அருணகிரி, மாவட்ட தொண்டரணி டி.ஜி.ராஜசக்தி, கலை இலக்கிய அணி ஆசிரியர் சீனி ராஜ், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.ஆர்.எஸ்.ரவிச்சந்திரன், வி.எஸ் முருகன், மாவட்ட மாணவரணி ஒய்.முஸ்தபா, ராபின்சன், மைனர் மணிகண்டன், வர்த்தகர் அணி பரணிதரன், நகர இளைஞரணி குமரன், ஒன்றிய இளைஞர் அணி சு.வெ.வெங்கடேஷ், ஆனந்த் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.



# திண்டிவனத்தில் டிஎஸ்பி தலைமையில் பூசாரிகள், அறங்காவலர்களுக்கு கொரோனா தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஆலோசனை கூட்டம்

திண்டிவனம், ஆக. 02 2021: திண்டிவனத்தில் அனைத்து ஆலய அர்ச்சகர்கள் பூசாரிகள் மற்றும் அறங்காவலர்களுக்கு தடுப்பு குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.

திண்டிவனம் சரோஜா திருமண மண்டபத்தில் டி.எஸ்.பி கணேசன், அறநிலைய துறையை சேர்ந்த கன்னிகா ஆகியோர் தலைமையில் திண்டிவனம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஆலய அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளை அழைத்து கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக பக்தர்கள் சமூக இடைவெளியை கடைபிடிப்பது குறித்தும், அதிக கூட்டங்கள் சேரக்கூடாது என்பதை வலியுறுத்தியும், 10 வயதுக்கு உட்பட்ட மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை கோவிலுக்குள் அனுமதிக்க கூடாது என்றும், அதிகமான மக்கள் கூட கூடாது என விழிப்புணர்வை ஏற்படுத்தி அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.



# அரியலூரில் 2.5 கோடி மதிப்பில் மின்வழிப்பாதை அமைக்கும் பணியை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் துவக்கி வைத்தார்

அரியலூர்: அரியலூர் மாவட்டம் பொய்யாத நல்லூர் கிராமத்தில் 33 கேவி திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கான மின் வழிப்பாதையை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் மூலம் தங்கு தடையின்றி மின்சாரம் கிடைக்கும் வகையில் 30 ஆயிரம் மின் நுகர்வோர்கள் பயன்பெறுகின்றனர்.

நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் மின்வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





திருச்செந்தூர்: தமிழக அரசின் உத்தரவின் பேரில் திருச்செந்தூர் முருகன் கோவில் நான்கு நாட்கள் நடை சாத்தப்பட்ட காரணத்தினால் சாமி தரிசனத்திற்காக வெளியூரிலிருந்து வந்த முருக பக்தர்கள் கோவிலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது.திருச்செந்தூர் மருத்துவமனை எதிரில் உள்ள நுழைவாயிலில் இருந்து பொதுமக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். எனவே பொதுமக்கள் அரசு அறிவித்த நெறிமுறைகளை கடைப்பிடித்து இந்த கொரோனா காலகட்டத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.



திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், நேரு வீதியில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அதிக கூட்டத்துடன் இயங்கிய தனியார் சூப்பர் மார்க்கெட் மற்றும் மளிகை கடையை திண்டிவனம் நகராட்சி ஊழியர்கள் பூட்டு போட்டனர்.



மதுரை : மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஒத்தக்கடையில் கொரோனா பெருந்தொற்றை தவிர்க்கும் நோக்கில் தமிழ்நாடு அரசின் கொரோனா விழிப்புணர்வு தொடர் பிரச்சாரத்தை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் அனிஷ்சேகர், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர்பூமிநாதன், ஒத்தக்கடை ஊராட்சி மன்ற தலைவர் சரவணன்மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.



விருதுநகர்: விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு முன்னாள் அமைச்சர் வே தங்கப்பாண்டியனின் 24வது நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மதுரை மாவட்ட செயலாளர் தளபதி மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார் உடன் மதுரை மாவட்ட நிர்வாகிகள் மற்றும் விருதுநகர் வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எல் திருமாறன் உடன் இருந்தனர்.




# அரியலூரில் இரு வேறு இடங்களில் நீரில் மூழ்கி சிறுவன் உள்ளிட்ட 2 பேர் உயிரிழப்பு

அரியலூர்: அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகே உள்ள தட்டான்சாவடியில் கிராமத்தில் வீட்டின் பின்புறம் உற்ள சிமெண்ட் தொட்டியில் தவறி விழுந்த 5 வயது சிறுவன் சந்தீப்ரோஷன் உயிரிழப்பு.

இதே போல் சன்னாவூர் கிராமத்தை சோர்ந்தவர் ரியோ ஆண்டனி இவர் தற்போது நடைபெற்ற போலீஸ் உடல் தகுதியில் தேர்வாகியுள்ளார்.

இதற்க்காக நீச்சல் பயிற்ச்சி மேற்கொள்ள அருகில் உள்ள முதுவத்தூர் கிராமத்தில் கிணற்றில் நீச்சல் அடித்துள்ளார்.

அப்போது நீரில் மூழ்கி உயிரிழந்தார். இது குறித்து வெங்கனூர் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மாம்பட்டு கிராமம், கதவு எண் 110, சாவடி தெரு. முகவரியில் வசிக்கும் காத்தவராயன் குமாரர் சிவக்குமார் அவர்களின் தகவல் பேரில் தெரிவிக்கப்படும் அறிவிப்பு யாதெனில் எமது கட்சிக்காரர் சிவக்குமாரின் தந்தை காத்தவராயன் வயது 75 என்பவர் கடந்த 6 மாத காலமாக சுய நினைவு இன்றி படுத்த படுக்கையில் உள்ளார். எமது கட்சிக்காரர் சிவக்குமாரின் தந்தையார் காத்தவராயன் சுயமாக சம்பாதித்த கீழ்க்கண்ட புல எண்களில் அடங்கியுள்ள அசையா சொத்தின் மீது எமது கட்சிக்காரர் சிவக்குமாரின் சகோதர சகோதரிகள் மற்றும் சொந்தங்கள், அயலார்கள், யாரும் காத்தவராயன் சொத்துக்கள் சொத்துக்களை குத்தகை மற்றும் அடமானம் உயில்கள், தான செட்டில்மெண்ட், கிரைய உடன்படிக்கை பத்திரம், கிரைய பத்திரம் போன்ற வில்லங்களை ஏற்படுத்த கூடாது அதாவது எந்த விதமான பாராதீனம் செய்ய கூடாது அவ்வாறு பதிவு செய்யப்படும் ஆவணங்கள் யாவும் செல்லாது. மேலும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சொத்து போய் சேராது அவ்வாறு பதிவு செய்யப்படும் ஆவணங்கள் யாவும் உரிய நீதிமன்றத்தால் வழக்கிட நேரிடும் என்பதை எமது கட்சிக்காரர் சிவக்குமாரின் தரப்பில் தெரிவிக்கப்படும் பகிரங்கமான அறிவிப்பு ஆகும்.

## சொத்து விபரம்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மாம்பட்டு கிராமம் பட்டா எண் 822, 107, 531, 147, 230, 248 இதில் கண்ட புல எண்கள் 241/1A1, 242/2B1, 53/2, 54/1D, 54/1F, 56/9A1, 56/9A3, 55/1A2, 54/1C, 55/3A, 54/1A, 56/16, 51/5B, 24/12, 24,1 மற்றும் போளூர் நகரில் காமாட்சி அம்மன் கோயில் தெருவில் உள்ள ரணி ஆயில் மில் புல எண் 264/B1, இதில் கண்ட புல எண்கள் சொத்து ஆனது காத்தவராயன் உடையார் த/பெ பர்வத உடையார் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

**இப்படிக்கு**
**K சுதர்சனன் M.A., LL.B., DL**
**வழக்கறிஞர்**
**போளூர்**

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Monday, August 02, 2021 | Rs.2/- | ISSUE - 18

# President of India to grace the commemoration of the 100th year of the Madras Legislative Council and unveil portrait of Dr Kalaignar M. Karunanidhi in Chennai

Chennai, August 02, 2021: Vice Admiral SN Ghormade, AVSM, NM has assumed charge as the Vice Chief of Naval Staff from Vice Admiral G Ashok Kumar, PVSM, AVSM, VSM, ADC at a formal ceremony held this morning at South Block, New Delhi. Vice Admiral G Ashok Kumar is retiring today after glorious service of 39 years.

Vice Admiral SN Ghormade is an alumni of the National Defence Academy (NDA), Khadakwasla, Naval Staff College at the United States Naval War College, Newport, Rhode Island, and the Naval War College, Mumbai. The Flag Officer was commissioned in the Indian Navy on 01 Jan 1984 and is a Navigation and Direction specialist. The Flag Officer has had extensive operational tenures onboard frontline warships of the Indian Navy. During his career spanning over 37 years, he has been through a myriad of operational and staff appointments. His important operational appointments include Commands of Guided Missile Frigate INS Brahmaputra, Submarine Rescue Vessel INS Nireekshak, and Minesweeper INS Alleppey, and Second-in-Command of Guided Missile Frigate INS Ganga. INS Nireekshak was awarded the Unit Citation for the first time during his command.

His important staff appointments ashore include Assistant Chief of Personnel (Human Resources Development), Principal Director of Personnel, Director Naval Plans and Joint Director Naval Plans at Naval Headquarters as separate assignments, Director (Military Affairs) at the Ministry of External Affairs (Disarmament & International Security Affairs), Local Workup Team (West), and Instructor at the Navigation Direction School and the National Defence Academy. The officer also held the coveted appointments of Flag Officer Commanding Karnataka Naval Area and Flag Officer Commanding Maharashtra Naval Area.

In the rank of Vice Admiral he has held the challenging and coveted appointments of Director General Naval Operations, Chief of Staff Eastern Naval Command and Controller Personnel Services. The Flag



Officer was holding the tri-service appointment of Deputy Chief (Operations & Training) at Headquarters Integrated Defence Staff prior taking over the present appointment as Vice Chief of the Naval Staff at IHQ MoD(N).

The Flag officer was awarded the Ati Vishisht Seva Medal on 26 Jan 17 and Nausena Medal in 2007 by the President of India, and Commendation by the Chief of the Naval Staff in 2000.

He has succeeded Vice Admiral G Ashok Kumar who retires after more than 39 years of illustrious service on 31 Jul 21. During his tenure as VCNS, the Navy saw an increase in budget allocation with 100% utilisation of allocated budget with impetus on capital acquisition. He proactively pushed for adopting 'AtmaNirbhar Bharat' Mission with Navy allocating more than 2/3rd of capital procurement from indigenous sources, 39 out of 41 ships and submarines for Indian Navy are being constructed in Indian Shipyards. The first ever procurement case under the Strategic Partnership Model for Project 75(I) was successfully progressed for issuance of RFP during his tenure. Many other instances of technological advancements, capability enhancements and research and development projects with DRDO and DPSU were progressed during his illustrious tenure.

# Urgent need to bridge the skill gap in youth: Vice President

New Delhi, August 02, 2021: The Vice President, Shri M. Venkaiah Naidu today stressed the urgent need to bridge the skill gap in the youth to make them competent for the new market demands and to improve the productivity of our workforce. 'This is critical to accelerate India's economy in the coming years,' he said.




In this regard, Shri Naidu called upon the leaders in the industry and social sector to supplement the efforts of the government in training and skill development such as the Kaushal Vikas Yojana, Udaan, etc. He urged the industry to take this up as a 'noble social mission'. He appreciated the efforts of Indian companies who have been imparting such vocational training through their corporate social responsibility and generating sustainable livelihoods for many poor people. He also noted the crucial role of skilling in uplifting and empowering women financially and socially.

Visiting the GMR Varalakshmi Foundation's Centre for Empowerment and Livelihoods in Hyderabad, Shri Naidu interacted with the staff and the participants undergoing training at the centre. He suggested that skill up-gradation must also match the emerging demands of the 21st century in order to remain competitive in the job market. He advised the trainees to be abreast with the latest technological developments.

Later, the Vice President also visited GMR Chinmaya Vidyalaya and interacted with the teachers and students. The founder-chairman of GMR Group, Grandhi Mallikarjuna Rao, officials and staff of the GMR Varalakshmi Foundation and others were present during the visit.

# Union Home Minister Shri Amit Shah lays foundation stone of Uttar Pradesh State Institute of Forensic Sciences

New Delhi, August, 01 2021: Voltas, India's undisputed leader in Cooling Products, and the No. 1 AC brand, from the house of the Tata's, announced lucrative monsoon season offers on its portfolio of Cooling Products and Home Appliances for its PAN India customers. The offers will be available until mid-September, and can be availed through in-store purchases.

Under these offers, consumers can buy ACs with 0% Consumer Finance through NBFCs along with Lifetime Inverter Compressor Warranty and 5-year comprehensive warranty. On all Air Conditioners, Air Coolers, and Home Appliances Voltas is running the zero down payment scheme where customers do not have to pay any down payment while opting for the product in easy EMIs. Not only that, within this scheme the customers can avail different tenure for EMIs for its entire range of Voltas Air Conditioners & Air Coolers and Voltas Beko Home Appliances. Moreover, an Easy EMI option is also available on Voltas Commercial Refrigeration Products and Air Purifiers. Voltas has partnered for the Easy EMI programmes with all leading NBFCs.

Additionally, the products can also be bought with attractive cashback offers of up to 15% through credit cards of leading banks on all Air Conditioners and Home Appliances. Further, customers can avail for No Cost EMI up to 9 months on Air Conditioners, and up to 12 months on Appliances, and No Cost EMI up to 6 Months tenure on All Air Coolers, through credit cards.

Commenting on the announcement, Mr. Pradeep Bakshi, MD & CEO, Voltas Limited said, "Due to the hybrid working model, the demand is returning back this



year, as consumers are seeking cooling products and home appliances that offer them cooling, convenience and comfort. These offers for the monsoon season have been introduced keeping in mind affordability, as well as ease of purchase for our customers. We have partnered with leading financial institutions for facilitating easy EMI programmes for our range of products, as well as credit card cashback offers. We believe these offers will enable customers to invest in upgrading their cooling products and home appliances with no financial burden"

# Shuttler P V Sindhu bags bronze medal in Tokyo Olympics, becomes the first Indian woman to win 2 Olympic medals

Chennai August 02 2021: **Key Highlight: Sindhu defeated He Bing Jiao of China by 21-13 and 21-15 in the bronze medal match**

**President Shri Ram NathKovid and Prime Minister Shri Narendra Modi congratulate Sindhu for her stupendous performance**

**Congratulating Sindhu, Sports Minister Anurag Singh Thakur says, you made history**

Indian shuttler P V Sindhuwon the bronze medal in women's single match in Tokyo Olympics today. PV Sindhu defeated He Bing Jiao of China by 21-13 and 21-15 in the bronze medal match and became the first Indian woman to win two Olympic medals. Sindhu won silver at Rio 2016. Wrestler Sushil Kumar is the first and only other Indian to win two Olympic medals. President Shri Ram NathKovind, Prime



Minister Shri Narendra Modi, Sports Minister Shri Anurag Thakur and Indians from all corner of the country congratulated PV Sindhu for her achievement.

# PM congratulates P V Sindhu for winning Bronze Medal in Badminton at Tokyo Olympics 2020

**Chennai August 02 2021: The Prime Minister, Shri Narendra Modi has congratulated P V Sindhu for winning the Bronze medal in Badminton at Tokyo Olympics 2020. The Prime Minister also said that she is India's pride and one of our most outstanding Olympians.**

**In a tweet, the Prime Minister said;**

**"We are all elated by the stellar performance by @Pvsindhu1. Congratulations to her on winning the Bronze at @Tokyo2020. She is India's pride and one of our most outstanding Olympians. #Tokyo2020"**



# ESTABLISHMENT OF HOTLINE BETWEEN INDIAN ARMY AND PEOPLE'S LIBERATION ARMY (PLA) IN NORTH SIKKIM

New Delhi, August 02, 2021: A hotline was established between Indian Army in Kongra La, North Sikkim and PLA at Khamba Dzong in Tibetan Autonomous Region to further the spirit of trust and cordial relations along the borders. The event coincided with the PLA Day on 01 Aug 2021.

The Armed forces of the two countries have well established mechanisms for communication at ground commanders level. These hotlines in various sectors go a long way in enhancing the same and maintaining peace and tranquility at the borders.

The inauguration was attended by ground commanders of the respective Armies and a message of friendship and harmony was exchanged through the Hotline.



# 10 Guinness world record have been created during the distribution camps conducted by ministry under ADIP scheme

New Delhi, August, 02 2021: A 'Samajik Adhikarita Shivir' for distribution of aids and assistive devices to 'Divyangjan' under the ADIP Scheme and to Senior Citizens under the 'Rashtriya Vayoshri Yojana' of the Ministry of Social Justice and Empowerment, Government of India was organized by the Department of Empowerment of Persons with Disabilities (DEPwD in association with ALIMCO and District Administration Aurangabad (Bihar) at Town Hall in District Collectorate campus, Aurangabad.




Chief Guest of the function Dr. Virendra Kumar, Union Minister for Social Justice and Empowerment, Govt. of India inaugurated the camp virtually from New Delhi along with Sushri Pratima Bhoumik, Union Minister of State for Social Justice and Empowerment, Govt. of India who presided over the function. Shri A. Narayanswamy, Union Minister of State for Social Justice and Empowerment, Govt. of India also graced the occasion virtually. Shri Sushil Kumar Singh, Member of Parliament, Aurangabad attended the function at main venue in Aurangabad whereas Shri Mahabali Singh, Member of Parliament, Karakat joined the function virtually in the presence of other dignitaries.

A total of 5102 aids and assistive devices valued at Rs.2.43 crore will be distributed free of cost to 1521 Divyangjan and 546 Senior Citizens at Block/Panchayat levels by following the SOP prepared by the Department in view of COVID-19 Pandemic.

Different type of assistive devices which are to be



distributed among identified Divyangjan and senior citizens beneficiaries registered during assessment camps at Block Level includes 1062 Tricycle, 385 Wheelchairs, 936 Crutches, 417 Walking Sticks, 43 Rollators, 07 Smart Phone, 40 Smart Cane, 8 Braille Kit, 06 C. P Chair, 16 MSIED Kit, 10 ADL Kit, 06 Cell phone, 873 Hearing Aid, 332 Artificial Limbs and Callipers , 505 tetrapod, 02 Walker, 62 Spectacles, 392 Dentures etc.

The camps are conducted under the Scheme of Assistance to Disabled Persons (ADIP) for Purchase/Fitting of Aid/Appliances (ADIP) is one of the most popular scheme for providing assistive aids & appliance to Divyangjans and Rashtriya Vayoshri Yojana for providing daily living assistive devices for senior citizens and is organized by Artificial Limbs Manufacturing Corporation of India (ALIMCO), a Public Sector Undertaking under the Ministry of Social Justice and Empowerment has been identified as the implementing agency of the ADIP scheme in association with States/districts authorities.

In view of COVID19 Pandemic, a Standard Operating Procedure (SOP) has been approved by the Government of India for ensuring assessment and distribution of aids and assistive devices while observing social distancing and sanitization protocols.

Shri D R Sarin, CMD ALIMCO addressed the vote of thanks in the function virtually and Shri Saurav Suman, Collector, Aurangabad was also present at the main venue of the function in Aurangabad.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction